05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல் பற்றிய ஓர் ஆய்வு

# MENINGKATAN KEMAHIRAN MENULIS KARANGAN FIKSYEN DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA DENGAN MENGGUNAKAN METACOGNITIF THEORI

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குகனேஸ்வரி த/பெ சண்முக சுந்தரம்

KUGANESWARY A/L SHANMUGA SUNDRAM

சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2025

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல் பற்றிய ஓர் ஆய்வு**

MENINGKATAN KEMAHIRAN MENULIS KARANGAN FIKSYEN DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA DENGAN MENGGUNAKAN METACOGNITIF THEORI

குகனேஸ்வரி த/பெ சண்முக சுந்தரம்

KUGANESWARY A/L SHANMUGA SUNDRAM

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இந்த ஆய்வு தமிழமொழிக கல்வியியலில் இளங்கலைப் பட்டத்தைப் பெறுவதற்காகச் சமர்பிக்கப்பட்டது

LATIHAN ILMIAH INI DIKEMUKAKANBAGI MEMENUHI SEBAHAGIAN SYARAT UNTUK MEMPEROLEH IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN

தமிழ்மொழிப்பிரிவு நவீன மொழித்துறை மொழிதொடர்பியல் புலம்
சுல்தான் இட்ரிஸ் கல்வியியல் பல்கலைக்கழகம்

PROGRAM BAHASA TAMIL, JABATAN BAAHSA MODEN FAKULTI BAHASA DAN KOMINIKASI UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS

2025

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

UNIVERSITI PENDIDIKAN SULTAN IDRIS
SULTAN IDRIS EDUCATION UNIVERSITY

படைப்புரிமை உறுதிமொழி
PERAKUAN KEASLIAN PENULISAN

இந்த உறுதிமொழி (14 ஜனவரி 2025) அன்று வழங்கப்பட்டது. Perakuan ini telah dibuat pada seperti tarikh di atas.

i.மாணவர் உறுதிமொழி (Perakuan Pelajar):

தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப் பட்டத்திற்காக சுயஅறிதிறன் கோட்பாட்டைப் பயன்படுத்தி இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்தும் திறனை மேம்படுத்துதல் எனும் தலைப்பிலான இந்த ஆய்வேடு என்னுடைய சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என மொழி தொடர்பியல் புலத்தின் மாணவனாகிய நான் குகனேஸ்வரி சண்முக சுந்தரம் (D20211100694) உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வில் பதிப்புரிமையுடைய படைப்புகள் யாவும் அனுமதி பெறப்பட்டு அவற்றின் மூலங்களைக் குறிப்பிட்டதோடு, துணைபுரிந்த அனைத்து மேற்கோள்களும் துணைநூற்பட்டியலில் முறையாகவும் தெளிவாகவும் எழுதப்பட்டுள்ளன.

Saya, KUGANESWARY A/P SHANMUGA SUNDRAM (D20211100694) FAKULTI BAHASA DAN KOMUNIKASI dengan ini mengaku bahawa projek penyelidikan yang bertajuk MENINGKATAN KEMAHIRAN MENULIS KARANGAN FIKSYEN DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA DENGAN MENGGUNAKAN METACOGNITIF THEORI adalah hasil kerja saya sendiri. Saya tidak memplagiat dan apa-apa penggunaan mana-mana hasil kerja yang mengandungi hak cipta telah dilakukan secara urusan yang wajar dan bagi maksud yang dibenarkan dan apa- apa petikan, ekstrak, rujukan atau pengeluaran semula daripada atau kepada mana-mana hasil yang mengandungi hak cipta telah dinyatakan dengan sejelasnya dan secukupnya.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

______________________________

மாணவர் கையொப்பம் / Tandatangan pelajar

ii. நெறியாளர் உறுதிமொழி (Perakuan Penyelia):

சுயஅறிதிறன் கோட்பாட்டைப் பயன்படுத்தி இரண்டாம் படிவ மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுத்தும் திறனை மேம்படுத்துதல் என்ற தலைப்பிலான இந்த ஆய்வேடு குகனேஸ்வரி சண்முக சுந்தரம் (D20211100694) என்ற மாணவரின் சொந்த முயற்சியால் உருவாக்கப்பட்டது என ஆய்வு நெறியாளராகிய நான், முனைவர் பிரங்களின் தம்பி ஜோஸ் செலிதுஸ் டார்லின் உறுதிமொழி வழங்குகின்றேன். இந்த ஆய்வேடு தமிழ்மொழிக் கல்வியியல் இளங்கலைப்பட்டத்தைப் பெறுவதற்காக மொழி தொடர்பியல் புலத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

Saya, DR. FRANKLIN THAMBI JOSE SELITUS DARLING dengan ini mengesahkan bahawa hasil kerja pelajar yang bertajuk MENINGKATAN KEMAHIRAN MENULIS KARANGAN FIKSYEN DALAM KALANGAN PELAJAR TINGKATAN DUA DENGAN MENGGUNAKAN METACOGNITIF THEORI dihasilkan oleh pelajar seperti nama di atas, dan telah diserahkan kepada FAKULTI BAHASA DAN KOMUNIKASI bagi memenuhi sebahagian syarat untuk memperoleh IJAZAH SARJANA MUDA PENDIDIKAN (BAHASA TAMIL) DENGAN KEPUJIAN.

03.02.2025

______________ ______________*Franklin*______________

நாள் / Tarikh நெறியாளர் கையொப்பம் / Tandatangan Penyelia



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# நன்றியுரை

இந்த ஆய்வினை சிறப்பாக செய்து முடிக்க நம்பிக்கையையும் அருளையும் வழங்கிய இறைவனை வணங்குகிறேன். மேலும், இந்த ஆய்வினை செய்ய எனக்கு அனுமதியளித்த சுல்தான் இட்ரீஸ் பல்கலைக்கழகத்தின் தமிழ்பிரிவுக்கு என் மனமார்ந்த நன்றிகள். இந்த ஆய்வினை குறித்த நேரத்தில் செய்யவும் திட்டமிட்டபடி பிழையின்றி செய்து முடிக்கவும் வழிக்கட்டியாக இருத்த முனைவர் பிரங்களின் தம்பி ஜோஸ் செலிதுஸ் டார்லின் அவர்களுக்கும் முனைவர் கிங்ஸ்டன் பால்தம்புராஜ் அவர்களுக்கும் எனது அன்பார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். எனக்கு மனதளவில் உற்றச்சாகத்தைக் கொடுத்து சிறப்பாக இந்த ஆய்வினை முடிக்க துணைப்புரிந்த என் பெற்றோர்கள், ஆசிரியர்கள், நண்பர்கள் என அனைவருக்கும் இவ்வேளையில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன். மேலும், இந்த ஆய்வு முழுமையடைய தரவுகள் சேகரிக்க உதவி புரிந்த ஆசிரியர்கள், மாணவர்கள், காப்பார் மாவட்ட இடைநிலைப்பள்ளிகளுக்கும் இவ்வேளையில் என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் இந்த ஆய்வை சிறந்த முறையில் செய்து முடிக்க துணைப் புரிந்த அனைவருக்கும் என் உள்ளம் கனிந்த நன்றியைச் சமர்பிக்கிறேன்.

நன்றி, வணக்கம்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

**ஆய்வு சுருக்கம்**

இவ்வாய்வு, சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் 2 மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டது. மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதுவதில் எதிர்நோக்கும் சிக்கல்களை அடையாளம் காண முன்னறி சோதனை, உற்று நோக்கல் பாரம், கருத்தறி வினா, மற்றும் நேர்காணல் ஆகிய முறைகள் பயன்படுத்தப்பட்டன. முன்னறி சோதனை மூலம், மாணவர்களின் சிக்கல்கள், குறிப்பாக கருத்துருவாக்கம், மொழிப் பயன்பாடு, கற்பனைத் திறன், கட்டமைப்பு மற்றும் தன்னம்பிக்கை குறைவு என்பன அடையாளம் காணப்பட்டது. தொடர்ந்து, சுயஅறிதிறன் கோட்பாட்டின் மூன்று முக்கிய நிலைகள்—திட்டமிடல், கண்காணிப்பு, மதிப்பீடு—அடிப்படையாகக் கொண்டு ஐந்து கட்டங்களில் செயல்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் மாணவர்களின் திறன்களை மேம்படுத்த உதவின. இந்த நடவடிக்கைகளின் பின்னர், பின்னறி சோதனை மூலம் மாணவர்களின் மேம்பாடு கண்காணிக்கப்பட்டது. சுயஅறிதிறன் கோட்பாடு மாணவர்களின் கற்பனைத் திறனை மேம்படுத்துவதில் நேர்த்தியான வழிகாட்டியாக விளங்கியது. இதன் விளைவாக, மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனில் தெளிவும் நம்பிக்கையும் வளர்ந்தன. ஆசிரியர்களும் பயனடைந்தனர்; சுயஅறிதிறன் கோட்பாட்டின் வழிமுறைகள் கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகளை மேலும் திறம்படக் கட்டமைக்க உதவின. இந்த ஆய்வு, மலேசிய தமிழ்மொழி கலைத்திட்டத்தில் கற்பனை எழுதும் திறனை மேம்படுத்த புதிய பாதையைக் காண்பித்தது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# ENHANCING IMAGINATIVE WRITING SKILLS AMONG FORM TWO STUDENTS THROUGHBMETACOGNITIVE THEORY

## ABSTRACT

This study explored the enhancement of Form 2 students' creative essay-writing skills through the application of metacognitive theory. To identify challenges faced by students in writing creative essays, methods such as pre-tests, observation, reflective questionnaires, and interviews were employed. The pre-tests revealed key difficulties such as idea generation, language usage, imagination, structure, and a lack of confidence. Subsequently, five stages of interventions were designed and implemented, based on the core principles of metacognitive theory: planning, monitoring, and evaluation. Post-intervention assessments demonstrated significant improvement in students' essay-writing abilities. The application of metacognitive strategies effectively enhanced students' creativity, clarity, and self-assurance in crafting imaginative essays. Teachers also benefited from this study as the metacognitive approach provided a structured framework to facilitate learning and teaching processes. Overall, the study contributed valuable insights into enhancing creative writing skills in the Malaysian Tamil language curriculum, showcasing metacognitive theory as a practical and impactful tool.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# பொருளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| படைப்புரிமை உறுதிமொழி | I. |
| நன்றியுரை | II. |
| ஆய்வுச் சுருக்கம் | III. |
| ABSTRACT | IV. |
| பொருளடக்கம் | V. |
| | |
| இயல் 1 அறிமுகம் | 1 |
| 1.1 முன்னுரை | 3 |
| 1.2 ஆய்வுப் பின்னணி | 6 |
| 1.3 ஆய்வுச் சிக்கல் | 7 |
| 1.4 ஆய்வு நோக்கம் | 8 |
| 1.5 ஆய்வு வினா | 8 |
| 1.6 ஆய்வு நன்மை | 8 |
| 1.6.1 மாணவர்கள் | 8 |
| 1.6.2 ஆசிரியர்கள் | 9 |
| 1.7 ஆய்வு எல்லை | 9 |
| 1.8 ஆய்வுச் சான்றாதாரம் | 10 |
| 1.8.1 முதன்மைச் சான்றாதாரம் | 10 |
| 1.8.2 துணைச் சான்றாதாரம் | 11 |
| 1.9 கருப்பொருள் விளக்கம் | 11 |
| 1.9.1 சுயஅறிதிறன் கோட்பாடு | 11 |
| 1.9.2 படிவம் இரண்டு மாணவர்கள் | 12 |
| 1.9.3 எழுத்துத் திறன் | 12 |
| 1.9.4 கற்பனைக் கட்டுரை | 13 |
| 1.10 தொகுப்புரை | 14 |
| | |
| இயல் 2 ஆய்வு மீள்நோக்கு | 15 |
| 2.1 முன்னுரை | 15 |
| 2.2 முந்தைய ஆய்வுகள் | 15 |
| 2.3 தொகுப்புரை | 21 |




05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


**இயல் 3 ஆய்வு நெறிமுறை** 22

**3.1 முன்னுரை** 22

**3.2 ஆய்வு வடிவமைப்பு** 22

**3.2.1 மீட்டுணர்தல்** 24

**3.2.2 திட்டமிடுதல்** 24

**3.2.3 செயல்படுத்துதல்** 25

**3.2.4 உற்று நோக்குதல்** 25

**3.3 ஆய்வுக் கட்டமைப்பு** 26

**3.4 ஆய்வு அணுகுமுறை** 28

**3.5 ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டோர்** 28

**3.6 ஆய்வுக் கருவி** 29

**3.7 தரவு சேகரிக்கும் முறை** 30

**3.8 தரவு பகுப்பாய்வு முறை** 32

**3.9 ஆய்வுக் கோட்பாடு** 33

**3.10 ஆய்வுக் கோட்பாடு வரைப்படம்** 39

**3.11 தொகுப்புரை** 40

**இயல் 4 ஆய்வு அணுகுமுறை** 41

**4.1 முன்னுரை** 41

**4.2 ஆய்வு மாதிரி விபரங்கள்** 41

**4.2.1 முன்னறித் தேர்வு** 42

**4.2.2 உற்று நோக்கல் பாரம்** 42

**4.2.3 கருத்தறிவினா பாரம்** 43

**4.2.4 நேர்காணல்** 43

**4.2.5 பின்னறித் தேர்வு** 43

**4.3 தரவு பகுப்பாய்வு (நோக்கம் 1)** 44

**4.3.1 முன்னறித் தேர்வு** 44

**4.3.2 கருத்தறிவினா** 52

**4.3.3 நேர்காணல்** 66

**4.4 தரவு பகுப்பாய்வு (நோக்கம் 2)** 67

**4.4.1 முதல் படிநிலை : திட்டமிடுதல்** 68

**4.4.1.1 நடவடிக்கை 1** 68




05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi


4.4.1.2 நடவடிக்கை 2 69
4.4.1.3 நடவடிக்கை 3 71
4.4.1.4 நடவடிக்கை 4 73
4.4.1.5 நடவடிக்கை 5 77
4.4.2 இரண்டாம் படிநிலை : கண்காணித்தல் 78
4.4.3 மூன்றாம் படிநிலை : மதிப்பீடு 78
4.4.3.1 பின்னறித் தேர்வு 79
4.4.3.2 முன்னறி மற்றும் பின்னறித் தேர்வின் ஒப்பீடு 82
4.5 தொகுப்புரை 83

இயல் 5 முடிவுரை 84
5.1 முன்னுரை 84
5.2 ஆய்வு முடிவு 84
5.3 ஆய்வுக் கருத்துரை 86
5.3.1 ஆய்வுக் கருத்துரை வினா 1 87
5.3.2 ஆய்வுக் கருத்துரை வினா 2 88
5.4 தொடர் ஆய்வுக்கானப் பரிந்துரைகள் 89
5.5 முடிவுரை 91

துணைநூற்பட்டியல் 92
LAMPIRAN 93


05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

# இயல் 1

## ஆய்வு அறிமுகம்

### 1.1 முன்னுரை

மொழி என்பது ஒரு மனிதனின் சிந்தனை ஆற்றலை வளப்படுத்த உதவும் ஒரு வகை கருவியாகும். மேலும், சுப்ரமணியம் மற்றும் வெங்கடாசலம் (2021) என்பவர்கள் மொழி மாந்தனின் தொடர்பு ஊடகமாக விளங்கி அவனுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும் வெளியிடுவதற்கு உதவுகிறது என்று கூறியுள்ளனர். இதனால் தான் மலேசிய கல்வி அமைச்சு மாணவர்களின் சிந்தனை ஆற்றலை மேம்படுத்தும் நோக்கத்தில் மலேசியா கலைத்திட்டத்தில் தமிழ்மொழி பாடத்தை நான்கு முக்கிய அடிப்படைத் திறனான கேட்டல் பேச்சு, வாசிப்பு, எழுத்துக் கொண்டு

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

அமைக்கப்பட்டுள்ளது. சித்ரா செல்வி, துளசி, மணியரசன் (2022) என்பவர்கள் ஆரம்ப பள்ளியின் கற்றல் கற்பித்தலில் 30% முதல் 60% நேரம் எழுத்துத் திறனுக்கேச் செலவிடப்படுகிறது எனவும் இத்திறனில் ஆளுமைப் பெற மாணவர்களைக் குழந்தைப் பருவத்திலிருந்தே தயார் செய்தல் அவசியமானது என்று கூறியுள்ளனர். மொழித்திறனில் எழுத்துத் திறன் மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்த உதவும் ஒரு முக்கியமான கருவியாகப் பார்க்கப்படுகிறது. சிந்தனைத் திறன் இருவகையாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவை ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வு சிந்தனையாகும். பள்ளிச் சூழல் ஆக்கச் சிந்தனைக்கு மிகவும் பொருத்தமான ஒன்றாகப் பார்க்கப் படுவதாக முஸ்தபா மற்றும் பிர்சென் (2019) என்பவர்கள் கூறியுள்ளார். ஆக்கச் சிந்தனையில் ஒன்றாகக் கற்பனை ஆற்றல் பார்க்கப்படுகிறது. வாலெட் மற்றும் ரொபேர்ட் (1983) என்பவர்கள் கற்பனை ஆற்றல் என்பது புலன்களுக்குத் தெரியாதக்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

குணங்கள், பொருள்கள், சூழ்நிலைகள், உறவுகள் போன்றவற்றின் மன உருவகத்தை உருவாக்கும் திறன் என்று கூறியுள்ளனர். ஒருவரின் சிறிய வயது முதல் கற்பனை ஆற்றலானது மேம்படுகிறது. பள்ளி பருவத்தில் மாணவர்களிடையே இந்தக் கற்பனை ஆற்றல் என்பது மேலோங்கியிருக்கும். கற்பனைத் திறனைக் கொண்டு கட்டுரையும் எழுதலாம். இதனாலே, இடைநிலைப்பள்ளியின் தமிழ்மொழி கலைத்திட்டத்தில் ஆக்கச் சிந்தனையை மேம்படுத்தும் நோக்கத்தில் கற்பனைக் கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது. டெமிர் (2013) என்பவர் கற்பனைக் கட்டுரை என்பது ஏற்கனவே உள்ள தகவல்கள், கருத்துகள், நிகழ்வுகள், நினைவகத்தில் உள்ள ஒலிகள், படங்கள், வாசனைகள், உணர்வுகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றைக் கட்டுரை வழி கொண்டு சேர்ப்பது என்று குறிபிட்டுள்ளார். கற்பனைக் கட்டுரையை எழுதுவதற்கென சில வரைமுறைகள் உள்ளது. மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த நிறைய முறைகள் உள்ளன. அதில், சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும். சுய அறிதிறன் கோட்பாடு என்பது செயல்பாடுகள் குறித்த விழிப்புணர்வு, புரிந்துகொள்ளுதல், பணி செயல்திறன், கண்காணிப்புச் செயல்முறைகள் மற்றும் உத்திகளின் செயல்திறனை மதிப்பீடு செய்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒருவரின் அறிவாற்றலைக் கண்காணிக்கும் ஒழுங்குமுறையாகும் என எமிலி (2011) என்பவர் குறிப்பிட்டுள்ளார். மேலும், சுய அறிதிறன் கோட்பாடு என்பது தற்போதைய அறிவாற்றலைக் கண்காணிப்பதில் ஒரு நபர் பயன்படுத்தும் செயல்முறைகளின் தொகுப்பைக் குறிக்கிறது, இதனால் அவரது சொந்த நடத்தையை திறம்பட காண



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

முடிகிறது என்று மேதியு (2019) கூறியுள்ளார். ஆகவே, சுயஅறிதிறன் கோட்பாடு படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வில் உள்ள முதல் இயலானது ஆய்வுப் பின்னணி, ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொல் விளக்கம் ஆகியவற்றை உள்ளடக்கியுள்ளது.

## 1.2 ஆய்வுப் பின்னணி

மலேசிய தமிழ்க்கல்வி வரலாற்றின் படி தொடக்கக் காலத்தில் தமிழ்மொழி பாடத்திற்கு என கலைத்திட்டம் உருவாக்கப்படவில்லை. 1988 ஆம் ஆண்டிலே இடைநிலைப்பள்ளி தமிழ்மொழிக்கான முறையான கலைத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இக்கலைத்திட்டத்தில் அடிப்படை மொழித்திறன்களான கேட்டல், பேச்சு, வாசிப்பு, எழுத்து ஆகிய திறன்கள் இணைக்கப்பட்டுள்ளன. இந்த ஆய்வானது எழுத்துத் திறன் கொண்டு அமைப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

எழுத்து திறன் என்பது மனித சிந்தனைத் திறன் மேம்பாட்டிற்கு அத்தியாவசியமானதாகும். இது ஒரு நபரின் சிந்தனைகள், உணர்வுகள் மற்றும் அறிவுகளை மற்றவர்களுடன் பகிர்ந்துகொள்ளும் மிக முக்கியமான வழிமுறை ஆகும். எழுத்துத் திறன் தான் பேசும் தகவல்களைத் தெளிவாகவும், துல்லியமாகவும் வெளிப்படுத்த உதவுகிறது. இது படிக்கின்ற அனைவரின் மனதில் ஒரு ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துகிறது. எழுதுதல் என்பது சிக்கலான மொழித்திறன்களில்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஒன்றாகும், ஏனெனில் இது எழுதும் நுட்பங்கள் மற்றும் மொழித் திறன்களை உள்ளடக்கியது என்று சுசியானா விஜிரஹாயு, அட்ஜி சபுத்ரா சுதிவான் (2023) என்பவர்கள் கூறியுள்ளனர்.

எழுத்துத் திறன் ஒருவரின் ஆக்கச் சிந்தனை மற்றும் ஆய்வுச் சிந்தனையை மேம்படுத்த உதவும். மலேசியா தமிழ்மொழி கலைத்திட்டத்தில் மாணவர்களின் சிந்தனைத் திறனை மேம்படுத்தும் வகையில் பல்வகை எழுத்துப் படிவங்களை உருவாக்கும் திறன் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அதிலும் ஆக்கச் சிந்தனையை மேம்படுத்தும் நோக்கில் கற்பனைக் கட்டுரைக் கலைத்திட்டத்தில் இணைக்கப்பட்டுள்ளது. கற்பனைக் கட்டுரை என்பது எழுத்தாளரின் கற்பனை வளத்திற்கு விருந்து படைக்கும் ஒரு வகை இலக்கிய வடிவமாகும். இதில்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கதாபாத்திரங்கள், சம்பவங்கள், சூழல்கள் அனைத்தும் எழுத்தாளரின் படைப்பாற்றலில் உருவாகும் ஒரு கற்பனை உலகத்தை அடிப்படையாக கொண்டவை. இனியவைக் கற்றல் பன்னாட்டுத் தமிழியல் மின்னிதழ் (2023) என்ற மின்னிதழில் வின்சென்டர் என்னும் திறனாய்வாளர் கற்பனையை மூவகையாகப் பிரிக்கின்றார் என்றும், அவை, படைப்புக் கற்பனை, இயைபுக் கற்பனை, கருத்து விளக்கக் கற்பனை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. படைப்புக் கற்பனை என்பது புதிய கருத்துக்கள், கதாபாத்திரங்கள், சூழல்கள் போன்றவற்றை முற்றிலும் புதிதாக படைக்கும் திறன். தொடர்ந்து, இயைபுக் கற்பனை என்றால் ஏற்கனவே அனுபவித்தவற்றை ஒன்றோடொன்று இணைத்து, புதிய கருத்துக்களை உருவாக்கும்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திறன். இதில் ஒப்பீடுகள், உவமைகள், உருவகப்படுத்துதல்கள் போன்றவற்றைப் பயன்படுத்துவதில் இது முக்கிய பங்கு வகிக்கிறது. அடுத்ததாக, கருத்து விளக்கக் கற்பனையாகும். இவ்வகை ஒரு கருத்தை விளக்கவோ, புரிந்துகொள்ளவோ உதவும் வகையில் கற்பனையைப் பயன்படுத்துதல். இவ்வனைத்து கற்பனை வகையையும் எழுத்து வடிவில் எழுதும் பொழுது அது கற்பனைக் கட்டுரையாக மாறுகிறது. மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதுவதில் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். இதன் காரணமாகவே சுய அறிதிறன் கோட்பாடு வழி கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தச் சிந்தித்துள்ளார்.

சுய அறிதிறன் கோட்பாடு என்பது ஒருவரின் சொந்த எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் மற்றும் திறன்களைப் பற்றி புரிந்துகொள்ளும் திறனை விளக்கும் ஒரு உளவியல் கருத்தாகும். சுயஅறிதிறன் கோட்பாடு என்பது ஒருவரின் சொந்த எண்ணங்கள், உணர்வுகள், நடத்தைகள் மற்றும் திறன்களைப் பற்றி புரிந்துகொள்ளும் திறனை விளக்கும் ஒரு உளவியல் கருத்தாகும். சுய அறிதிறன் மூன்று ஒழுங்குமுறையைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அவை, திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

திட்டமிடல், கண்காணிப்பு மற்றும் மதிப்பீடு மூலம் கற்றல் செயல்பாட்டில் ஒருவரின் அறிவாற்றல் நடவடிக்கைகளை ஒழுங்குப் படுத்த முடியும். இக்கோட்பாட்டு கற்பனைக் கட்டுரையைக் கற்பிப்பதற்கு ஏதுவாக இருக்கும். எனவே, ஆய்வாளர் படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மேம்படுத்த சுயஅறிதிறன் கோட்பாடு மாதிரியைப் பயன்படுத்திக் கற்றல் கற்பித்தலை மேற்கொண்டுள்ளார்.

**1.3 ஆய்வுச் சிக்கல்**

இடைநிலைப்பள்ளி மாணவர்கள் எழுத்துத் திறனில் அதிகமான சிக்கலை எதிர்நோக்குவது கண்டறிய முடிகிறது. அதிலும் படிவம் இரண்டு மாணவர்களிடையே கட்டுரை எழுதும் திறனில் அதிகமான சிக்கல் ஏற்படுவது அறிய முடிந்தது. புல்கியா, எஸ்., மஹ்பூப், எம்., & நுக்ரஹேனி, டி. ஏ. (2021) என்பவர்கள் தலைப்பின் மீது நம்பிக்கையின்மை போன்ற பாதிப்பை ஏற்படுத்தும் பிரச்சினைகள் மாணவர்களின் எழுத்து திறனில் ஈடுப்பாட்டைத் தடுக்கின்றன, இது மோசமான கட்டுரைத் தரத்திற்கு வழிவகுக்கிறது. கற்பனைக் கட்டுரை எழுதுதல் என்பது மாணவர்களின் படைப்புத் திறனை வளர்க்கும் ஒரு முக்கியமான கல்வி நடவடிக்கை. இருப்பினும், பல மாணவர்கள் கருத்துருவாக்கம், மொழிப் பயன்பாடு, கற்பனைத் திறன், கட்டுமானம் மற்றும் தன்னம்பிக்கை இழப்பு போன்ற பல்வேறு சவால்களை எதிர்கொள்கின்றனர். , மாணவர்கள் கற்பனைக் கதைகளுக்குப் பொருத்தமான கருத்துகளைத் தேர்ந்தெடுப்பதில் சிரமப்படுவதாகவும், கதாபாத்திரங்களை வளர்ப்பதில் குறைபாடுகள் இருப்பதாகவும் ராஜேந்திரன் (2010) தனது ஆய்வில் கண்டறிந்துள்ளார்.மாணவர்கள் கற்பனைக் கட்டுரைகளில் மொழிப் பயன்பாட்டில் குறைபாடுகள் இருப்பதாகவும், சொற்களஞ்சியம் குறைவாக இருப்பதாகவும்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

சந்திரமோகன் (2015) தனது ஆய்வில், கண்டறிந்துள்ளார். மேலும், ஆய்வில், மாணவர்களின் கற்பனைத் திறன் குறைவாக இருப்பதால், புதிய கதைகளை உருவாக்க முடியாமல் தவிப்பதாகவும், பழைய கதைகளை மறுபிரதியெடுப்பதாகவும் என லதா (2018) கண்டறிந்துள்ளார். மாணவர்கள் கதையின் கட்டமைப்பைப் பின்பற்றாமல், கதையைத் தொடர்ச்சியாக எழுத முடியாமல் தவிப்பதாகவும், கதையின் முடிவு திடீரென முடிவதாகவும் ராமச்சந்திரன் (2012) என்பவர் கண்டறிந்துள்ளார். மாணவர்கள் தங்கள் எழுத்துத் திறன் குறித்து தன்னம்பிக்கை இழந்து, எழுதும் செயல்பாட்டில் ஈடுபடாமல் இருப்பதாகவும், எழுதும் பயம் இருப்பதாகவும் கிருஷ்ணமூர்த்தி (2017) தனது ஆய்வில்,குறிப்பிட்டுள்ளார். இதே போல்,

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கருத்துக்களை சரியான முறையில் மாற்றுவதிலும் கட்டுரையைச் சரியான கட்டமைப்புடன் அமைபதிலும் மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குவதாக குறிப்பிட்டுள்ளனர். மேலும்,

**1.4 ஆய்வு நோக்கம்**

இந்த ஆய்வு இரண்டு நோக்கங்கள் அடைவதைக் கருத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை,

I. இரண்டாம் படிவ மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதுவதில் ஏற்படும் சிக்கல்களைக் கண்டறிதல்.

II. சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்துதல்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.5 ஆய்வு வினா

மேற்காணும் ஆய்வு நோக்கத்தைக் கொண்டு இரண்டு ஆய்வு வினாக்கள் கொடுக்கப்பட்டுள்ளன. அவை,

I. படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறன் எவ்வாறு உள்ளது?

II. சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை எப்படி மேம்படுத்துவது?

### 1.6 ஆய்வு நன்மைகள்

இந்த ஆய்வு பலருக்குப் பயனளிக்கும் வகையில் அமையாவுள்ளது. இந்த ஆய்வு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் துணைப் புரியும் வகையில் உருவாகவுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

#### 1.6.1 மாணவர்கள்

இந்த ஆய்வில் பயன்படுத்தப்பட்டச் சுய அறிதிறன் கோட்பாட்டின் மாதிரியானது மாணவர்களின் கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்தத் துணைப் புரியும். மேலும், மாணவர்கள் கற்பனைக் கட்டுரை எழுதுவதற்கு முன் அத்தலைப்பு எவ்வகைக் கற்பனைக் கட்டுரை வகையைச் சார்ந்தது என கண்டறிய துணைப் புரியும். அதுமட்டுமின்றி ஆசிரியாகள் பல்வேறு அணுகுமுறைகளைச் சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி பயன்படுத்துவதால் மாணவர்கள் ஆர்வத்தோடுக் கற்றல் கற்பித்தலை மேற்கொள்வர்.



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.6.2 ஆசிரியர்கள்

இந்த ஆய்வில் ஆசிரியர்கள் பெரியாளவில் நன்மையடைகின்றனர். ஆசிரியர்கள் சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த முடியும். இந்தக் கோட்பாடைப் பயன்படுத்தும் பொழுது ஆசிரியர்கள் சுலபமாக மாணவர்களை மதிப்பீடு செய்ய முடியும். ஆசிரியர்கள் கற்றல் கற்பித்தலின் போது மாணவர்களின் ஈட்டுப்பாட்டை அதிகரிக்க முடியும். மேலும், கற்பனைக் கட்டுரையைக் கற்பிபதற்கான உத்திகளை ஆசிரியர் அறிந்து கொள்ள முடியும். இதனால் ஒரு விளைப்பயமிக்க கற்றல் கற்பித்தலை மேற்கொள்ளலாம். சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனை மேம்படுத்த புதிய அணுகுமுறைகளை அறிமுகம் செய்ய முடியும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.7 ஆய்வு எல்லை

இந்த ஆய்வானது இரண்டு முக்கிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. அவ்விரண்டு முக்கிய நோக்கங்களும் படிவம் இரண்டு மாணவர்களையே உட்படுத்தியே உருவாக்கப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டுக்குப், படிவம் இரண்டு மாணவர்களிடையே கற்பனைக் கட்டுரை எழுதும் திறனில் உள்ள சிக்கல்களைக் கண்டறிதல் அதனை சுய அறிதிறன் கோட்பாட்டின் வழி மேம்படுத்துதல் ஆகும். சிலாங்கூர் மாநிலத்தில் காப்பார் மாவட்டத்தில் உள்ள இடைநிலைப்பள்ளியில் இந்த ஆய்வானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இப்பள்ளியில் சுமார் 500-க்கும் மேற்பட்ட இந்தியா மாணவிகள் பயில்கின்றனர். அதில் 200 மாணவர்களுக்கும் மேற்ப்பட்டோர் தமிழ்மொழி பாடத்தைப் பயில்கின்றனர். இந்த



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

ஆய்வு படிவம் இரண்டு மாணவர்களுக்கு என குறிப்பிட்டு மேற்கொள்ளப்படுவதால் சுமார் 20 மாணவிகளைக் கொண்டே நடத்தப்பட்டுள்ன. மேலும், காப்பார் பெண்கள் இடைநிலைப்பள்ளி பெண்கள் மட்டுமே பயிலும் ஒரு பள்ளி என்பதால் இந்த ஆய்வில் பெண் மாணவர்கள் மட்டுமே உட்படுத்தப்பட்டனர். மேலும், இந்த ஆய்வில் சுமார் இரண்டு தமிழ்மொழி கற்பிக்கும் ஆசிரியர்கள் உட்படுத்தப்பட்டுள்ளனர். இந்த ஆய்வில் 20 மாணவிகள் மற்றும் இரண்டு ஆசிரியர்களை முக்கிய கருவியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர்.

## 1.8 ஆய்வுச் சான்றாதாரம்

இந்த ஆய்வு பல சான்றாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டது. அவை, முதன்மை சான்றாதாரம் மற்றும் துணைச் சான்றாதாரம் ஆகும்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.8.1. முதன்மைச் சான்றாதாரம்

இந்த ஆய்வுக்கு முதன்மையாக பயன்படுத்தப்பட்ட சான்றுகளையே முதன்மை சான்றாதாரம் ஆகும் . இந்த ஆய்வை மேற்கொள்ள தேவையான சான்றுகள் பல வகையான ஊடகங்களில் இருந்து சேகரிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காடுகளுக்கு, ஆய்வு கட்டுரை, ஆய்வேடுகள், புத்தகங்கள் ஆகும். இதில் கற்பனைக் கட்டுரை மற்றும் சுய அறிதிறன் கோட்பாடுத் தொடர்பான தகவல்கள் பல ஆய்வேடுகளின் வழி சேகரிக்கப்பட்டுள்ளன. கற்பனைக் கட்டுரை தொடர்பான செய்திகள் அதிகமாக ஆங்கிலத்திலே இருப்பதால் ஆங்கில கற்பனைக் கட்டுரைகளும் இந்த ஆய்வில்



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

பயன்படுத்தப்பட்டுள்ளன. மேலும், இந்த ஆய்வின் தலைப்பைச் சார்ந்து பல புத்தகளும் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேற்காணும் சான்றாதாரங்கள் அனைத்தும் பின்வரும் துணைநூற்பட்டியலில் இணைக்கப்பட்டுள்ளன.

### 1.8.2. துணைச் சான்றாதாரம்

இந்த ஆய்வில் துணைச் சான்றாதாரமாக படிவம் இரண்டு மாணவிகளும் இரண்டு தமிழ்மொழி ஆசிரியர்களும் உட்படுத்தப்பட்டுள்ளனர். இவர்களிடமிருந்து, முன்னறி சோதனை, பின்னறி சோதனை மற்றும் நேர்காணல் வழி தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இத்தரவுகள் பின்னர் ஆய்வுக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

## 1.9 கருப்பொருள் விளக்கம்

### 1.9.1. சுய அறிதிறன் கோட்பாடு

சுய அறிதிறன் கோட்பாடு என்பது ஒருவரின் திறமைகள், திறன்கள் மற்றும் அறிவு பற்றிய தன்னுடைய நம்பிக்கைகள் மற்றும் கருத்துக்களை விவரிக்கும் ஒரு கருத்தியல் கட்டமைப்பாகும். இது ஒருவரின் சுய மதிப்பீட்டைப் பாதிக்கும் முக்கிய காரணியாகும், மேலும் அவர்களின் இலக்குகளை அடையவும், சவால்களை எதிர்கொள்ளவும், தங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறவும் உதவும் ஒரு கோட்பாடு ஆகும். சுய அறிதிறன் என்பது நம்முடைய பலம், பலவீனம், மதிப்புகள், நம்பிக்கைகள்,



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

மற்றும் உணர்ச்சிகளைப் பற்றிய நனவான புரிதல் ஆகும். இது நம்மை நம்முடைய சுற்றுப்புறங்களிலிருந்து தனித்துப் பார்க்கவும், நம்முடைய செயல்கள் மற்றும் நடத்தைகளின் பின்னணியில் உள்ள காரணங்களை புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

### 1.9.2. படிவம் இரண்டு மாணவர்கள்

மலேசியா கல்வி அமைச்சு வழங்கும் வரையறை அடிப்படையில், "படிவம் 2 மாணவர்கள்" என்பது மலேசிய பள்ளிக்கல்வி முறையில் உள்ள ஒரு குறிப்பிட்ட தரத்தின் மாணவர்களை குறிக்கிறது. மலேசிய கல்வி முறையில், "படிவம் 2" என்பவர்கள் இடைநிலைப்பள்ளியில் பள்ளியில்

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

இரண்டாம் ஆண்டைப் படிக்கும் மாணவர்களைக் குறிக்கிறது. பொதுவாக, படிவம் 2 மாணவர்கள் 14 அல்லது 15 வயது மதிக்கத்தக்கவராக இருப்பர்கள்.

### 1.9.3. எழுத்துத் திறன்

எழுத்துத் திறன் என்பது மொழியைப் பயன்படுத்தி எண்ணங்களை, கருத்துக்களை மற்றும் தகவல்களைத் தெளிவாகவும், சுருக்கமாகவும், ஈர்க்கக்கூடியதாகவும் எழுதும் திறனாகும். சித்ரா செல்வி, துளசி, மணியரசன் (2022) ஆகியோர் ஒரு மொழியிலுள்ள ஒலிகளை



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

வரிவடிவமாக அமைப்பது எழுத்தாகும் என்று குறிப்பிட்டுள்ளனர். எழுத்து திறன் என்பது வெறும் வார்த்தைகளை அடுக்கி வைப்பதை விட, ஒரு கருத்தைத் திறம்பட வெளிப்படுத்துவதற்கான ஒரு கலை வடிவமாகும். இது தெளிவான, சுருக்கமான மற்றும் ஈடுபாடுடன் எழுதும் திறன் ஆகும். இதில் இலக்கணம், சொற்களஞ்சியம், அமைப்பு, மற்றும் கதை சொல்லும் திறன் போன்றவை அடங்கும். தகவல்தொடர்பு, கற்றல், படைப்பாற்றல் மற்றும் தொழில் வாய்ப்புகள் போன்ற பல்வேறு துறைகளில் எழுத்து திறன் முக்கிய பங்கு வகிக்கிறது. அடிக்கடி எழுதுவது, நிறைய வாசிப்பது, கூர்ந்து கவனிப்பது, மற்றும் கருத்துக்களைப் பெறுவது போன்றவை எழுத்து திறனை மேம்படுத்த சில வழிகள்.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

### 1.9.4. கற்பனைக் கட்டுரை

கற்பனை என்பது மனித சிந்தனையின் உந்து சக்தியாகும், மேலும் மனித நாகரீகம் கற்பனையின் செயல்பாடு மற்றும் பயிற்சியால் உருவாக்கப்பட்டது. கற்பனை கட்டுரை என்பது உண்மை அல்லாத, ஆனால் ஆக்கப்பூர்வமான மற்றும் கற்பனையான கதைகளை உருவாக்கும் ஒரு வகை கட்டுரை ஆகும். கற்பனையில் ஆற்றலில் தோன்றும் அனைத்தும் எழுத்து வடிவில் மாற்றும் பொழுது, அது கற்பனைக் கட்டுரையாக உருவாகுகிறது. கற்பனையில் தோன்றுவதைப் படிப் படியாக முறையாக எழுத்து வடிவில் கொண்டு சேர்க்கும் பொழுது அது



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi

கட்டுரை வடிவமாகுகிறது. இதனையே கற்பனைக் கட்டுரை என்று குறிப்பிடப்படுகிறது.

## 1.10 தொகுப்புரை

இயல் ஒன்றில் ஆய்வின் அறிமுகம் விளக்கப்பட்டுள்ளது. இந்த இயலில் எழுத்துத் திறன், தமிழ்மொழி கலைத்திட்டம், மலேசிய தமிழ்க்கல்வி வரலாறு என பல முக்கிய அம்சங்களைப் பற்றி விளக்கப்பட்டுள்ளது. மேலும், இதில் ஆய்வுச் சிக்கல், ஆய்வு நோக்கம், ஆய்வு வினா, ஆய்வு நன்மைகள், ஆய்வு எல்லை, ஆய்வுச் சான்றாதாரம், கலைச்சொல் விளக்கம் பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.

05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi



05-4506832 pustaka.upsi.edu.my Perpustakaan Tuanku Bainun Kampus Sultan Abdul Jalil Shah PustakaTBainun ptbupsi